## பொதுப்பாயிரத்தின் இலக்கணம்

**4.** ***நூலே நுவல்வோ னுவலுந் திறனே***
***கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்***
***எல்லா நூற்கு மிவைபொதுப்* பாயிரம்.***

சூ-ம், பொதுப்பாயிரம்[1] இத்துணைப் பகுதிப்படும் எனக் கூறுகின்றது.

இ-ள்: **நூலே-** நூல் இலக்கணமும், **நுவல்வோன்-** ஆசிரியன் இலக்கணமும், **நுவலுந் திறனே-** ஆசிரியன் கற்பிக்கும் இலக்கணமும், **கொள்வோன்-** சீடன் இலக்கணமும், **(கோடற்) கூற்று-** சீடன் கொள்ளும் முறைமை இலக்கணமும், **ஆம் ஐந்தும்-** ஆகிய இவ்வைந்து இலக்கணமும், **எல்லா நூற்கும்-** எல்லா நூன்முகத்தும் பொருந்தும், **இவை பொதுப்பாயிரம்-** பொதுப்பாயிரம் இவையாம் என்றவாறு. *(4)*

## நூலின் வரலாறு

**5.** ***நூலி னியல்பே நுவலி னோரிரு***
***பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்***
***நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி***
***ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ***
***டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்***
***என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை***
***விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.***

சூ-ம், நூலின் இலக்கணம் இஃது எனக் கூறியது.

இ-ள்: **நூலின் இயல்பே நுவலின்-** நூல்[2] இலக்கணத்தைச் சொல்லின், **ஓரிரு பாயிரம் தோற்றி-** பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமும் முன் உடைத்தாய், **மும்மையின் ஒன்றாய்-** மூன்று நூலின் *(6)* ஒரு நூலாய், **நாற்பொருள் பயத்தோடு-** நால்வகைப் பொருளையும் *(11)* பெறுவதாக, **எழுமதம் தழுவி-** எழுவகை மதமும் பட *(12)* வருவதாய், **ஐயிரு குற்றமும் அகற்றி-** பத்துக் குற்றமும் *(13)* சாராது வருவதாய், **அம்மாட்சியோடு-** பத்துப் பெருமையோடும் கூடி *(14)* வருவதாய், **எண்ணான்கு உத்தியின்-** முப்பத்திரண்டு தந்திர உத்தியுடனே *(15)* வருவதாய், **இயலே[3] படலம்**

---

* "நூற்கு மியைபொதுப்" என்பது மயிலைநாதர் கொண்ட பாடம்.

1 பொதுப்பாயிரம் உணர்த்தும் பொருள்களின் தொகைபற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. நான்கு என்பது சிலர் (நக்கீரர், இறை. 1; இளம்பூரணர், தொல். சிற. பாயி.; ஆத்திரையன் பேராசிரியன், தொல். பொது. பாயி.) கருத்து. ஐந்து என்பது பவணந்தி முனிவர் கருத்து.

2 நூலாவது, "ஒரு பொருள் நுதலிய சூத்திரமும் இனமொழி கிளந்த ஓத்தும் பொதுமொழி கிளந்த படலமும் என்னும் மூன்று உறுப்பு அடக்கிய பிண்டம்" என்று சிவஞான முனிவர் (தொல். விரு. பக். 16) விளக்குவார்.

3 நூற்பாவில் உள்ளவாறே பதவுரையிலும், 'ஓத்துப் படலம்' என்று இருப்பது சிறப்பு.

***என்னும் உறுப்பினில்-*** இயலுறுப்பு (17), படலவுறுப்பு (18) என்னும் இவ்விரண்டு உறுப்பினை உடையதாய், ***சூத்திரம்-*** சூத்திரப் பொருளாகவும் (19-21), ***காண்டிகை-*** காண்டிகைப் பொருளாகவும் (23), ***விருத்தி ஆகும்-*** விருத்திப் பொருளாகவும் (24), ***விகற்ப நடை பெறுமே-*** இத்துணை வேறு பாடாகி வரும் இயல்பினை உடையது நூலாம் (26) என்றவாறு. (5)

**நூல்களின் வகை**

**6.** ***முதல்வழி சார்பென* நூன்மூன் றாகும்.***

சூ-ம்,[1] பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் மேலே (3) கூறினமையான் பின் முறையே மூன்று நூலால் இவை எனக் கூறுகின்றது.

இ-ள்: ***முதல் வழி சார்பு என-*** முதல்நூல் என்றும் வழிநூல் என்றும் சார்பு நூல் என்றும், ***நூல் மூன்று ஆகும்-*** இம்மூன்று கூற்றதாம்[2] நூல் என்றவாறு. (6)

**முதல் நூல்**

**7.** ***அவற்றுள்,***
***வினையி னீங்கி விளங்கிய வறிவின்***
***முனைவன் கண்டது முதனூ லாகும்.***

சூ-ம்,[3] முதல்நூல் இது எனக் கூறுகின்றது.

இ-ள்: ***அவற்றுள்-*** மேற் கூறிய (6) நூல் மூன்றினுள், ***வினையின் நீங்கி-*** அனாதியின் இயல்பாகவே பாசங்களை நீங்கி, ***விளங்கிய அறிவின்-*** விளக்க மாகிய பேரறிவினை உடைய, ***முனைவன் கண்டது-*** எல்லா உலகிற்கும் முதல்வனாகிய கடவுள் செய்யப்பட்டது, ***முதல்நூல் ஆகும்-*** முதல்நூலாவது என்றவாறு. (7)

---

* "புடையென" என்பது மயிலைநாதர் கொண்ட பாடம்.

[1] பாயிரப் பகுதியில் உள்ள நூற்பாக்களில் பலவற்றை (நூ. 6, 8, 9, 11, 12, 13, 14, 18, 21, 38, 40, 41, 42, 45, 46, 47, 48, 52, 54) இறையனார் களவியல் உரை (நூ. 1), யாப்பருங்கல விருத்தி (பாயி.; நூ. 95), வீரசோழிய உரை (நூ. 178), இளம்பூரணர் உரை (தொல். சிற. பாயி.) முதலியவற்றில் சிற்சில வேறுபாடுகளுடன் காணலாம்; ஒருசில உரைநடையிலும் அமைந்துள்ளன.

[2] நான்காவதாக எதிர்நூல் என்பதும் ஒன்று உண்டு என்று உரையாசிரியர்கள் பலரும் (நக்கீரர், இறை. 1; யாப்பருங்கல உரையாசிரியர், பாயி.; இளம்பூரணர், தொல். மரபு. 95; பேராசிரியர், தொல். மரபு. 93) குறித்துள்ளார்கள். இதற்குத்,
"தன்கோ ணிறீஇப் பிறன்கோண் மறுப்ப
தெதிர்நூ லென்ப ரொருசா ரோரே"
என்னும் மேற்கோள் நூற்பாவை நக்கீரர் (இறை. 1) காட்டுவார்.

[3] இது தொல்காப்பிய (மரபு. 96) நூற்பா.

### வழிநூல்

**8. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்**
**பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி**
**அழியா மரபினது வழிநூ லாகும்.**

சூ-ம், வழிநூலாவது இது எனக் கூறுகின்றது.

இ-ள்: **முன்னோர்-** முதல்நூல் உடையராகிய பழைய ஆசிரியருடைய, **நூலின் முடிபு ஒருங்கு ஒத்து-** நூலில் கூறிய பொருள்முடிவு முழுவதும் ஒத்து, **பின்னோன்-** முதல்நூல் உடையார்க்குப் பின்னோனாகிய வழிநூற்காரன், **வேண்டும் விகற்பம் கூறி-** தான் செய்யும் நூலின் வேண்டும் வினா, விடை கூறி, **அழியா மரபினது-** முதல்நூல் மரபு அழியாது வருவது, **வழிநூல் ஆகும்-** வழிநூலாவது என்றவாறு. (8)

### சார்புநூல்

**9. இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்**
**திரிபுவே றுடையது புடைநூ லாகும்.**

சூ-ம், சார்புநூலாவது இது எனக் கூறுகின்றது.

இ-ள்: **இருவர் நூற்கும்-** முன்னோர், பின்னோர் என்னும் இவ்விருவர் செய்த முதல்நூற்கும் வழிநூற்கும், **ஒரு சிறை தொடங்கி-** வேறு இடமாகத் தொடங்கி, **திரிபு வேறு உடையது-** சொல் திரிபும் பொருள் திரிபும் ஆன வேறுபாடு உடையது, **புடைநூல் ஆகும்-** சார்புநூல் ஆகும் என்றவாறு.

இம்மூன்றினுள் ஒன்றாய்[1] வருவது நூல் என்று அறிக. (9)

### வழிநூல் சார்புநூல்களுக்குச் சிறப்புவிதி

**10. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்**
**பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்- முன்னோரின்**
**வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்குங்**
**கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.**

சூ-ம்,[2] தொல்லாசிரியர் சூத்திரங்களையும் இந்த நூலில் வைத்துக் கூற லாம் என்கின்றது.

---

[1] ''ஒரு நூல் தனக்கு வழிநூலை நோக்கின் முதல்நூலாகவும் முதல்நூலை நோக்கின் வழிநூலா கவும் அயல்நூலை நோக்கின் சார்பு நூலாகவும் நிற்கும் ஆயினும் இம்முத்திறத்தினுள் ஒரு திறத்தின்கண் மற்றொரு திறம் இன்மையின், 'மும்மையி னொன்றாய்' (நூ. 4) என்றார்.'' என்பது சங்கர நமச்சிவாயர் (நன். 8) உரை.

[2] இவ்வெண்பா மயிலைநாதர் (நன்.8) உரையில் மேற்கோள்.

இ-ள்: **முன்னோர் மொழிபொருளே அன்றி-** முன் பழைய ஆசிரியர் நூலின் மொழிந்த பொருளே அன்றி, **அவர் மொழியும்-** அப்பொருளை அவர் பொதிந்த மொழியையும், **பொன்னே போல்-** பொன்னின் மூடின சீலையும் பொன்போல் எடுத்ததுபோலப் பொருள் பொதிந்த சொல்லையும் பொருளே போல, **போற்றுவம் என்பதற்கும்-** பேணி வைத்துக்கொள்வோம் என்பது காண்டற்கும், **முன்னோரின்-** பழைய ஆசிரியர் செய்த நூல்போல, **வேறு நூல் செய்தும் என்னும்-** வேறு நூல் செய்கின்றோம் என்னும், **மேற் கோள் இல் என்பதற்கும்-** மேலாய்க் கோட்பாடு இல்லை என்பதற்கும், **கூறு பழஞ்சூத்திரத்தின் கோள்**[1]**-** பழஞ்சூத்திரத்தின் கொள்கையைக் கூறுக என்றவாறு. (10)

## நூற்பயன்

**11. அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே.**

சூ-ம்,[2] முறையே நூற்பொருட் பயன் ஆமாறு கூறுகின்றது.

இ-ள்: **அறம் பொருள் இன்பம் வீடு-** அறப்பயன் எனவும் பொருட்பயன் எனவும் காமப்பயன் எனவும் வீட்டுப்பயன் எனவும், **அடைதல்-** இந்நால் வகைப் பொருட்பயனையும் அடைதல், **நூற் பயனே-** நூற்குப் பயனாவது என்றவாறு. (11)

## மதம் ஏழு

**12. எழுவகை மதமே யுடன்படன்* மறுத்தல்**
**பிறர்தம் மதமேற் கொண்டு களைவே**
**தாஅ னாட்டித் தனாது நிறுப்பே**
**இருவர் மாறுகோ ளொருதலை துணிவே**
**பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்**
**பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.**

சூ-ம், எழுவகை மதமாவது இவை எனக் கூறுகின்றது.

இ-ள்: **எழுவகை மதமே-** எழுவகை ஆசிரியர் மதவிகற்பமாவன, **உடன் படல்-** முன்னூலார் கூறிய கோட்பாடு ஆகியவற்றிற்கு உடன்படுதலும், **மறுத்தல்-** சிலவற்றை வினாவும் விடையும் கூறி மறுத்தலும், **பிறர்தம் மதம்**

[1] ''ஆசிரிய வசனம் எனினும் மேற்கோள் எனினும் பழஞ்சூத்திரத்தின் கோள் எனினும் ஒக்கும்.'' என்பது சங்கர நமச்சிவாயர் (நன்.9) விளக்கம்.

[2] இந்நூற்பா முதல் பதினைந்தாம் நூற்பா முடிய உள்ள ஐந்து நூற்பாக்களும் பாடலனார் சொல்லியன என்று யாப்பருங்கல உரையாசிரியரும் (நூ.95) குணசாகரரும் (யா.கா.57) கூறுவார்கள்.

* ''மதமே யுடம்படன்'' என்பது மயிலைநாதர் கொண்ட பாடம்.

**மேற்கொண்டு களைவே-** பிறர் நூலில் கூறிய கோட்பாட்டைத் தன் நூலில் எடுத்துக்காட்டி அவையிற்றைக் களைதலும், **தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே-** தானே புதிதாய் ஓர் இலக்கணம் நாட்டித் தன்னுடைய உத்தி கொண்டு அவை நிலைநிறுத்தலும், **இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே-** இருவர் மாறுபட்ட வழக்கில் தான் ஒன்றைத் துணிந்து எடுத்தலும், **பிறர் நூல் குற்றம் காட்டல்-** பிறருடைய நூல்களிலே உள்ள குற்றங்களைத் தோற்றுவித்தலும், **ஏனைப் பிறிதொடு படாஅன் தன் மதம் கொளலே-** தான் கூறிய உவமை, உத்தி முதலாகிய கற்பனைகள் தன் நூல் ஒழிந்த பிறிது நூலின் காணாதவையாய்த் தன் மதத்துக்கே உரித்தாகத் தோற்றுவித்தலும் ஆம் என்றவாறு. *(12)*

## குற்றம் பத்து

**13.** ***குன்றக் கூறன் மிகைபடக் கூறல்***
***கூறியது கூறன் மாறுகொளக் கூறல்***
***வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்***
***வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்***
***சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை***
***என்றிவை யீரைங் குற்ற நூற்கே.***

சூ-ம், பத்து வகைக் குற்றமாவன இவை எனக் கூறுகின்றது.

இ-ள்: **குன்றக் கூறல்-** எழுத்துச், சொல், பொருள், யாப்பு, அலங்காரம் கூறுகின்றோம் எனத் தொடங்கி அவையிற்றில் குறையச் சொல்லுவதும், **மிகைபடக் கூறல்-** எழுத்தும் சொல்லும் பொருளும் சொல்லும் எனத் தொடங்கி யாப்பிலக்கணம் கூறுதலும், **கூறியது கூறல்-** எழுத்திலக்கணம் கூறிச் சொல்லிலக்கணம் கூறப் புகுந்தவர் மீண்டும் எழுத்திலக்கணத்தைக் கூறுதலும், **மாறுகொளக் கூறல்-** தாம் முன்னர் விதித்த இலக்கணத்திற்குப் பின்னர் மாறுபாடாகக் கூறுதலும், **வழூஉச்சொல் புணர்த்தல்-** இலக்கண விதி இல்லாத வழுவான சொற்களைப் புணர்த்தலும், **மயங்க வைத்தல்-** கற்றோர்க்கும் பொருள் மயங்க வைத்தலும், **வெற்றெனத் தொடுத்தல்-** பயன் இல்லாத சொற்களைப் பயத்தலும், **மற்றொன்று விரித்தல்-** தமிழ் இலக்கணம் சொல்லுவோம் எனத் தொடங்கி வடசொல் இலக்கணம் சொல்லுதலும், **சென்று தேய்ந்து இறுதல்-** சொல்லின்பம், பொருளின்பம் பயப்பத் தொடங்கி வர வரத் தேய்தலும், **நின்று பயன் இன்மை-** மோனை முதலாகிய இலக்கணம் வழுவாது வைத்துப் பொருளில் பயனின்றி முடித்தலும், **என்று இவை ஈரைம் குற்றம் நூற்கே-** எனக் கூறிய இப்பத்தும் நூற்குக் குற்றமாம் என்றவாறு. *(13)*

## அழகு பத்து

***14.*** ***சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்***
***நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்***
***ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்***
***முறையின் வைப்பே யுலகமலை யாமை***
***விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த***
***தாகுத னூலிற் கழகெனும் பத்தே.***

சூ-ம், பத்துப் பெருமையாவன இவை எனக் கூறுகின்றது.

இ-ள்: ***சுருங்கச் சொல்லல்-*** பல்வகைப் பட்ட பொருளும் விளங்கத் தொகைநிலைச்சொல்லாகச் சொல்லுதலும், ***விளங்க வைத்தல்-*** இலை மறை காய்போல ஆழ்ந்த பொருளையும் விளங்கிக்கிடக்க வைத்தலும், ***நவின் றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்-*** கூறினோர்க்கு இனிமையாகிய மொழிகளைப் புணர்த்தலும், கதலி பாகம்[1] என்றும் ஆம்; ***ஓசை உடைமை-*** நாவுக்கு இசைந்த ஒழுங்குள்ள ஓசையைப் பயத்தலும், ***ஆழம் உடைத்து ஆதல்-*** கயிற்றுக்கோணி விளங்காய்போல வெளிப்பட்டும் எடுக்கக் கூடாத ஆழ்ந்த பொருளாக வைத்தலும், நாளிகேர பாகம் என்றும் ஆம்; ***முறையின் வைப்பே-*** ஒன்றற்கு ஒன்று ஏற்றம் குறைவு கண்டு ஒன்றன்பின் ஒன்று வரன்முறையாக வைத்தலும், ***உலகம் மலையாமை-*** கற்று உணர்ந்தோர்க்கு மலையாத பொருளாகக் கொடுத்துக் கூறலும், ***விழுமியது பயத்தல்-*** உணர்ச்சியுள்ள பயனாகத் தோற்றலும், ***விளங்கு உதாரணத்தது ஆகுதல்-*** யார்க்கும் விளக்கமாகிய உதாரணங்களைப் பெற வைத்தலும், ***நூலிற்கு அழகு எனும் பத்தே-*** இப்பத்து குணப்பெருமையும் பட வருவது நூலுக்கு அழகாம் என்றவாறு. *(14)*

## உத்தி முப்பத்திரண்டு

***15.*** ***நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே***
***தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்***
***முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்***
***தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்***
***சொற்பொருள் விரித்த றொடர்ச்சொற் புணர்த்தல்***
***இரட்டுற மொழித லேதுவின் முடித்தல்***
***ஒப்பின் முடித்தன் மாட்டெறிந் தொழுகல்***

---

[1] பாகம் என்பது செய்யுள்நடை. அது பலா பாகம், சிலா பாகம், கதலி பாகம், நாளிகேர பாகம் என்று நான்கு வகைப்படும். பலா பாகம் பனச பாகம் என்றும் நாளிகேர பாகம் நாரிகேள பாகம் என்றும் சொல்லப்படும்.

பாகத்தின் வகைபற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. சிலர் இரண்டு என்பர்; மற்றும் சிலர் மூன்று என்பர்; ஒரு சிலர் அது ஒன்பது வகைப்படும் என்பர். இது வடமொழி மரபு.

**இறந்தது விலக்க லெதிரது போற்றல்**
**முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்**
**விகற்பத்தின் முடித்தன் முடிந்தது முடித்தல்***
**உரைத்து மென்ற லுரைத்தா மென்றல்**
**ஒருதலை துணித லெடுத்துக் காட்டல்**
**எடுத்த மொழியி னெய்த வைத்தல்**
**இன்ன தல்ல திதுவென மொழிதல்**
**எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்**
**பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்***
**தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்**
**சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்**
**ஒன்றின முடித்த றன்னின முடித்தல்**
**உய்த்துணர வைப்பென வுத்தியெண் ணான்கே.**

சூ-ம்,[1] உத்தி முப்பத்திரண்டாவது இவை எனக் கூறுகின்றது.

*இ-ள்:* **'நுதலிப் புகுதல் --- உய்த்துணர வைப்பென உத்தியெண் ணான்கே'** எனக் கூறிய முப்பத்திரண்டும்[2] நூலினது உத்தியாம் என்றவாறு. **(15)**

### உத்தியின் இலக்கணம்

16. **நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி**
**ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்**
**தகும்வகை செலுத்துத றந்திர வுத்தி.**

சூ-ம், தந்திர உத்திக்கு[3] இலக்கணம் இன்னது எனக் கூறுகின்றது.

*இ-ள்:* **நூற்பொருள் வழக்கொடு-** நூலாகிய செய்யுள் வழக்கொடும் உலகத்துப் பொருள் வழக்கொடும், **வாய்ப்பக் காட்டி-** பொருந்த எடுத்துக் காட்டி, **ஏற்புழி அறிந்து-** இவ்விடத்துக்கு இது பொருந்தும் என ஏற்கும் இடம் அறிந்து, **இதற்கு இவ்வகையாம் என-** இப்பொருட் கோட்பாட்டுக்கு இவ் வுத்தியாம் என, **தகும் வகை செலுத்துதல் தந்திர உத்தி-** தக்க வகையாகப் பொருந்துவது நூல் உத்தியாம் என்றவாறு. **(16)**

---

* *''முடிந்தவை முடித்தல்'', ''தானுடம் படுதல்'' என்பன மயிலைநாதர் கொண்ட பாடங்கள்.*

[1] பாடலனார் உரை என்று யாப்பருங்கல விருத்தி (நூ. 95) எடுத்துக் காட்டும் நூற்பா ஒன்றுடன் இந்நூற்பா பேரளவில் ஒத்துள்ளது.

[2] தொல்காப்பியம் (மரபு. 112), மாறனலங்காரம் (நூ. 25) முதலிய இலக்கணங்கள் வேறு சில உத்திகளையும் கூறும்.
உரையாசிரியர்களும் ஒரு சில உத்திகளைக் குறிப்பிடுவார்கள்.

[3] ''தந்திரம் என்பது நூல். உத்தியான் அமைக்கும் பொருளை உத்தி என்றது ஆகுபெயர்'' என்று சங்கர நமச்சிவாயர் (நன்.15) விளக்குவார்.